**<u>மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பொன்னேரி.</u>**

**<u>அ.வ.எண். 44/1998</u>**

இந்நீதிமன்றத்து கிரேடு – 3 பென்ஞ்ச் கிளார்க் திருமதி. தேவி அவர்களால் சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டு வாதி/பிரதிவாதி தரப்பு சாட்சி வாக்குமூலம் 1873–ஆம் ஆண்டு 10–வது சட்டத்திற்கு உட்பட்டு இன்று **2025 – ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 17 –** ஆம் நாளில் பதிவு செய்யப்பட்டது.

| | |
|---|---|
| **தேதி** | **17.11.2025** |
| **பெயர்** | **லலித் ஜி ஜெயின்** |
| **த/பெ** | **கேவர்ஜன்** |
| **சாட்சி** | **PW2** |
| **வயது** | **55** |
| **ஊர்** | **திருவல்லிகேணி, சென்னை** |
| **தொழில்** | **வியாபாரம்** |

**விசாரணை தொடங்கும் நேரம்–11.39. எ.எம்.**

**<u>முதல் விசாரணை –</u>**

1. நான் இவ்வழக்கின் 3ம்–வாதியாவேன். எனது வாக்குமூலம் பிரமாணப் பத்திரம் மூலம் முதல் விசாரணை சாட்சியம் அளிக்கிறேன். அதில் உள்ள சங்கதிகள் அனைத்தும் எனக்கு தெரியும் அதில் உள்ள கையொப்பம் என்னுடையது. இவ்வழக்கிற்கு ஆதரவாக கீழ்க்கண்ட ஆவணங்களை தாக்கல் செய்கிறேன்.

2. (1). 22.01.1985 தேதியிட்ட கிரைய பத்திரம் அசல் ஆவணம் **வா.சா.ஆ 1** ஆகவும்.

(2). 27.08.1987 தேதியிட்ட வட்டாச்சியரால் வழங்கப்பட்ட பட்டா (யு.டி.ஆர்) அசல் **வா.சா.ஆ–2** எனவும்.

(3). தாவா சொத்திற்கான கிஸ்து ரசீது 1 எண்ணிக்கை அசல் **வா.சா.ஆ 3** ஆகவும்.

(4). 04.06.1987 தேதியிட்ட 1–ம் பிரதிவாதி, வாதிக்கு அனுப்பிய அறிவிப்பு அசல் **வா.சா.ஆ 4** ஆகவும்.

(5). 18.06.1987 தேதியிட்ட 1ம் வாதி, 1ம் பிரதிவாதிக்கு அனுப்பிய பதில் கடிதம் **வா.சா.ஆ 5** ஆகவும்.

(6). 29.01.1997 தேதியிட்ட வாதி, பிரதிவாதிக்கு அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பு அசல் **வா.சா.ஆ 6** ஆகவும்.

(7). 05.02.1997 தேதியிட்ட 1ம் பிரதிவாதியின் வழக்கறிஞர் அறிவிப்பு அசல் **வா.சா.ஆ 7** ஆகவும்.
(8). 06.02.1997 1ம் பிரதிவாதி, வாதிக்கு எழுதிக்கொடுத்த கடிதம் அசல் **வா.சா.ஆ** 8 ஆகவும் ( **எதிர் தரப்பு வழக்கறிஞரால் ஆட்சேபிக்கப்பட்டு ஆட்சேபணைக்குட்பட்டு குறியீடு செய்யப்படுகிறது).**
(9). 02.03.1998 தேதியிட்ட 1ம் வாதி, 2ம் பிரதிவாதியின் வழக்கறிஞருக்கு அனுப்பிய இறுதி நோட்டீஸ் அசல் **வா.சா.ஆ 9** ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது.

**(குறுக்கு விசாரணை செய்ய வேண்டுகோளுக்கு இணங்க ஒத்திவைக்கப்படுகிறது).**
**விசாரணை முடியும் நேரம். 11.50 எ.எம்.**